[திருமதி ஆர். ராஜலட்சுமி] [2012 ஜனவரி 31

“தருதுயரம் தடாயேல் உன் சரணல்லால் சரணில்லை
அரிசினத்தால் ஈன்றதாய் அகற்றிடினும் அழுங்குழவி”

எனைத் தேற்றி அரவணைத்த அன்னையே உம் கருணைக்கீடாய் எதைச் செய்து சமன் செய்வேன்? நின்னையே சரணென்று நினைக்கிறேன்; நின்னையே சரணென்று நினைக்கிறேன், நின்னல்லால் வேறொரு தலைவியை ஒரு கணமும் நினைந்திலேன். இந்நித்திலத்தில் என் வாழ்வு இக்கணமே முடிந்திடினும், நித்திலத்தில் என் வாழ்வு இக்கணமே முடிந்திடினும், நின் அருளை நினைத்தேதான் அப்பொழுதே நான் முடிவேன்! உம் அருளை நினைத்தேதான் அப்பொழுதும் நான் முடிவேன்!

அம்மா, கடவுளாய் நீங்கள் கோலோச்சும் இக்கோட்டையிலே சான்றோர் நிறைந்த சபைதனிலே மீண்டும் ஒரு வாய்ப்பாக ஆளுநர் உரையை முன்மொழியப் பணித்தமைக்கு ஆயிரம் கோடி மலர்களை உம் தாள்களிலே பணிகிறேன் அம்மா! நன்றிகள் பல கோடி. வணக்கம் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி)

3. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(ஆ) சட்டமன்ற உறுப்பினர்கள் குடியிருப்பில் பெண் உறுப்பினர்களுக்கான உடற்பயிற்சிக் கூடம் திறத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள், நாளை (1–2–2012) புதன்கிழமை காலை 9–30 மணிக்கு சென்னை அரசினர் தோட்டம், சட்டமன்ற உறுப்பினர் குடியிருப்பு ‘C’ பிளாக்கில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள சட்டமன்ற பெண் உறுப்பினர்களுக்கான பிரத்தியேக உடற்பயிற்சிக் கூடத்தைத் திறந்துவைக்க இருக்கிறார்கள். எனவே, அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களும் அதில் கலந்துகொள்ள வேண்டுமென்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

7. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. இராமச்சந்திரன் அவர்கள்.